# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இலங்கைப் பொலிசாருக்காக இந்தியா வழங்கும் தொடர்ச்சியான ஆளுமைவிருத்தி பயிற்சி நெறிகள்

இலங்கைப் பொலிசாரின் கோரிக்கையின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள முன்னணி பொலிஸ் பயிற்சி நிறுவனங்களில் இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கான பல்வேறு ஆளுமை விருத்தி பயிற்சிகளை இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துள்ளது, இந்தியாவின் மனேசரில் உள்ள தேசிய பாதுகாவல் படை (NSG), ஜெய்ப்பூர், ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள மத்திய துப்பறிவு பயிற்சி நிலையம் (CDTI) ஆகியவற்றில் குறித்த பயிற்சிகள் நடைபெறுகின்றன.

2. இலங்கை பொலிஸ் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக இந்தியா பல்வேறு பயிற்சி நெறிகளை தொடர்ந்து முழுமையான அனுசரணையுடன் வழங்குகிறது. குற்றச்செயல் இடம்பெற்ற இடங்களின் முகாமைத்துவம், செயற்கை நுண்ணறிவு மற்றும் சைபர் குற்ற விசாரணை மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய விடயங்களில் வழங்கப்படும் உயர் தர பயிற்சிகள் மூலம் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, கனிஸ்ட, நடுத்தர மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட 60-க்கும் மேற்பட்ட பொலிசார் பயனடைந்துள்ளனர். இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) மற்றும் “இலங்கைக்கான உதவி” திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்தால் (GoI) இந்த கற்கைநெறிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் 130க்கும் மேற்பட்ட இலங்கை பொலிஸ் அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. ஜூன் 18இல் ஆரம்பமாகிய பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இருவாரகால பயிற்சிகளில் கலந்து கொள்வதற்காக 23 சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவினர் அண்மையில் புது டில்லிக்கு பயணித்துள்ளனர். இந்நிலையில் தமது பயணத்துக்கு முன்னதாக குறித்த அதிகாரிகள் கௌரவ உயர் ஸ்தானிகர் ஶ்ரீ சந்தோஷ் ஜா அவர்களை 13ஆம் திகதி ஜூன் 2024 அன்று சந்தித்திருந்தனர். அவர்கள் தற்போது பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல், உள்நாட்டு பாதுகாப்பு, இஸ்லாமிய மற்றும் ஏனைய மத அடிப்படைவாதம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து NIA இல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

*******************************

கொழும்பு
ஜூன் 21, 2024.